بسم الله الرحمن الرحيم

# ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை) அவர்களின் உண்மைக்கான சான்றுகள்.



**வெளியீடு : அமீர் ஜமாத்**

ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்

தமிழ்நாடு

## அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய ஆன்மீகப் பதவிகள்.

1. அமீருல் முஃமினீன் (19 ஜனவரி 2003)
2. ஹஸ்ரத் (25 ஜூலை 2003)
3. முஹையுத்தீன் (06,07 டிசம்பர் 2003)
4. முஸ்லிஹ் மவூத் (20 பிப்ரவரி 2004)
5. கலீஃபத்துல்லாஹ் (26,27 மே 2008)
6. இமாமே இன்குலாப் (26,27 மே 2008)
7. மஸீஹ் மவூத் (10 செப்டம்பர் 2010)
8. முஜத்தித் (10 செப்டம்பர் 2010)
9. ரஸூலுல்லாஹ் (அக்டோபர் 2010)
10. நபியுல்லாஹ் (அக்டோபர் 2010)

### திருக்குர்ஆனின் சான்றுகள் :

சான்று 1

அல்லாஹ் (வேதத்தையுடையவர்களிடத்தில்) எல்லா நபிமார்களின் மூலமும் உறுதிமொழி வாங்கிய நேரத்தை(யும் நினைத்துப் பாருங்கள்). வேதம், ஞானம் ஆகியவற்றிலிருந்து நான் உங்களுக்குக் கொடுத்துவிட்டுப் பின்னர் உங்களிடமுள்ளதை மெய்ப்பிக்கக் கூடிய ஒரு தூதர் உங்களிடம் வந்தால், அவரிடம் நீங்கள் நம்பிக்கை கொண்டேயாக வேண்டும். (மேலும்) நீங்கள் ஒப்புக்கொண்டு என் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று அவன் கேட்டதற்கு, ஆம் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என்று அவர்கள் கூறினர். இப்பொழுது நீங்கள் சாட்சியாக இருங்கள், நானும் உங்களுடன் சாட்சி(களுள் ஒரு சாட்சி)யாக இருக்கின்றேன் என்று கூறினான். (திருக்குர்ஆன் 3: 82 )

உங்களிடமுள்ளதை மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வசனத்தின் உடன்படிக்கையை உண்மைப்படுத்தும் விதமாக, அதாவது நம்முடைய கைகளில் இருக்கும் இறைவேதமாகிய திருக்குர்ஆனின் இவ்வசனத்தை மெய்ப்பிக்கும் வகையில், அல்லாஹ் அன்னாரை 15ஆம் நூற்றாண்டின் ஃகலீஃபத்துல்லாஹ்வாக நியமித்துள்ளான். கழிந்த 2000 மாவது ஆண்டு முதல் அன்னாருக்கு இறைச்செய்திகள் கிடைத்து கொண்டிருக்கிறது.மேலும் இன்றுவரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது (அல்ஹம்துலில்லாஹ்) இவ்வசனத்தின் மீது நாம் உறுதியாக நம்பிக்கை கொள்வோமேயானால் அன்னாரின் வாதங்களை இவ்வசனத்தின் அடிப்படையில் எவ்வாறு நம்மால் நிராகரிக்க இயலும்..?

சான்று 2

நாம் நபிமார்கள் எல்லோரிடத்தும், உம்மிடத்தும், நூஹ், இப்ராஹீம், மூஸா, மர்யமுடைய மகன் ஈஸா ஆகியோரிடத்தும் உடன்படிக்கை செய்த நேரத்தை (நினைத்துப் பாரும்). நாம் அவர்கள் எல்லோரிடமும் உறுதிவாய்ந்த உடன்படிக்கை ஒன்றை வாங்கினோம். ( திருக்குர்ஆன் 33: 8 )

கடந்தகால நபிமார்களிடம் அல்லாஹ் (மீஸாக்) உடன்படிக்கை செய்தது போன்று, முஹம்மது நபி(ஸல்) அவர்களிடமும் உடன்படிக்கை செய்துள்ளதாக மேலே குறிப்பிட்ட வசனம் மூலம் தெள்ளத் தெளிவாக உறுதியாகின்றது. அந்த உடன்படிக்கையின்படி அல்லாஹ்வினுடைய பிரதிநிதிகள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வருகை தந்துள்ளனர். ‘அல்லாஹ்வின் தீர்மானங்களில் எந்த மாற்றமும் இல்லை’ என்பதற்கிணங்க, அல்லாஹ்வும் அவனுடைய தூதர் எம்பெருமானார் (ஸல்) அவர்களும் செய்த உறுதிவாய்ந்த உடன்படிக்கையின்படியும், மேலும் இத்திருக்குர்ஆன் வசனத்தை நிரூபிக்கும் வகையிலும், முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களை இந்நூற்றாண்டில் அல்லாஹ் அவனுடைய பிரதிநிதியாக நியமித்துள்ளான். அன்னாரின் வருகைக்கான இரண்டாவது சான்று இவ்வசனத்தின் மூலம் நிரூபணமாகின்றது.

சான்று 3

இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம். ( திருக்குர்ஆன் 15: 10 )

திருக்குர்ஆனின் மொத்த உரிமையாளனும் யாரென்றால், யாவையும் படைத்து பராமரிக்கும் நம் இறைவனாகிய அல்லாஹ்வே ஆவான். ஒருவருக்கு சொந்தமான வீட்டை அவ்வீட்டின் உரிமையாளனே சுத்தம் செய்து சாயம்பூசி அழகுபடுத்துகின்ற அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறான் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை. அதேபோன்று தான் அகில உலக ரட்சகனாகிய அல்லாஹ்வே இந்த அறிவுரையை-வேதமாகிய திருக்குர்ஆனை இறக்கியதாகவும், அவனே இவ்வேதத்தை பாதுகாப்பதாகவும் நமக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றான். கடந்த 14 நூற்றாண்டுகளும் அதனை உறுதி செய்து வந்துள்ளான். இது அல்லாஹ்வின் மிக அருளுக்குரியதும், அந்த ஏகனுடைய உயர் கருணையின் வெளிப்பாடுமாகும். அந்த அருளே இந்த 15 ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து வெளிப்பட்டுள்ளது. ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களை அல்லாஹ் தன்னுடைய பிரதிநிதியாக தேர்வுசெய்த பின், அவனது வேதத்தின் தஃப்ஸீரை-இக்காலத்திற்கு அவசியமான விளக்கங்களை, இறைவஹீயின் வாயிலாக அன்னாருக்கு வழங்கி, தற்போது அது "அல் அஸீம் தஃப்ஸீருல் குர்ஆன்" ஆக ஆக்கம் பெற்றுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

திருக்குர்ஆனின் மேற்குறிப்பிட்டுள்ள வசனம் அன்னாரின் வருகைக்குரிய மூன்றாவது சான்றாக நிரூபணம் செய்கின்றது..

சான்று 4

அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும்,

அவன், அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப்பிறகு, அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னையே வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதற்க்குப் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள். (திருக்குர்ஆன் 24: 56 )

திருக்குர்ஆனின் இவ்வசனத்தின்படி, நம்பிக்கைக்கொண்டு நற்செயல் புரிபவர்களுக்கு கலீஃபாவை வழங்குவதாக அல்லாஹ் வாக்குறுதியளித்துள்ளான். மேலும் அவன் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் 'அல்லாஹ்வின் கலீஃபா' என்று இவ்வசனம் சாட்சி பகிர்கின்றது. அதற்கேற்ப கடந்த 14 நூற்றாண்டுகளும் அவ்வாக்குறுதியை நிறைவேற்றியும் வந்துள்ளான். அதுபோன்றே அவ்வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த 15-ஆம் நூற்றாண்டிலும் அல்லாஹ் (ஸுபஹ) ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களை கலீஃபாவாக தேர்வு செய்து நியமித்துள்ளான். இவ்வசனத்தின்படி அன்னார் '15ஆம் நூற்றாண்டின் கலீஃபா' ஆவார்கள். மேலும் இந்நூற்றாண்டில் 'அல்லாஹ்வின் கலீஃபா'என்று வாதிப்பவரும் அவர் ஒருவரே.. அல்லாஹ்வின் வாக்குறுதி இந்த 15ஆம் நூற்றாண்டிலும் அன்னாரின் வருகையினால் முழுமையாக நிறைவேறியுள்ளது. அன்னாரின் வருகைக்கான நான்காவது சான்று இவ்வசனத்தின் மூலம் நிரூபணமாகின்றது.

.

சான்று 5

"மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான்." (திருக்குர்ஆன் 62: 4 )

ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விடும் போது,மக்களின் ஆன்மீக மற்றும் பௌதீக நிலையில் சீர்குலைவு உருவாகி விடுகின்றது. அத்தகைய சீர்குலைவிலிருந்தும் மக்களை மீட்டெடுக்க அல்லாஹ் மனிதர்களில் அவனுடைய பிரதிநிதியை முஹம்மது நபி(ஸல்) அவர்களின்

பிரதிபிம்பமாக ஒருவர் அல்லது பலரைத் தேர்வு செய்கிறான். அதற்கேற்ப, இந்த இறுதி கால கட்டத்திலும், பின்னவர்களிலிருந்து (ஆகிரீன்கள்) மீண்டும் ஒரு பிரதி பிம்பத்தை அனுப்பி, மேலுள்ள வசனத்தை மெய்ப்படுத்தி இருக்கின்றான்.

14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய மஸீஹின் வாசலைத் திறப்பதற்காக வந்த ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மத்(அலை) அவர்களின் ஆன்மீக புதல்வன் என்ற நிலையிலும், வரும் அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் வரவிருக்கும் இறை பிரதிநிதிகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்களாக இருப்பதினால், அதன் அடிப்படையில் வந்துள்ள ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை) அவர்களின் மூலமாக இவ்வசனத்தின் உண்மைத்தன்மை மீண்டும் இக்காலத்திலும் நிறைவேறியுள்ளது. அன்னாரின் வருகைக்கான ஐந்தாவது சான்று இவ்வசனத்தின் மூலம் நிரூபணமாகின்றது.

சான்று 6

அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்லாஹ் அருள் புரிந்தவர்களான, நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்), சித்தீக்குகள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்த்தியாகிகள்),ஸாலிஹீன்கள் (நல்லவர்கள்), ஆகியோரைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள். இத்தகையோர் (மிக்க) நல்ல நண்பர்களாவர்.
(திருக்குர்ஆன் 4: 70)

இவ்வசனத்தின் மூலம் அல்லாஹ்வுக்கும், அவனது தூதர் ரஸூலே கரீம்(ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்களுக்கு, ஒவ்வொரு நூற்றாண்டிலும் வரும் புதிய தலைமுறைக்காக, மனிதர்களில் அல்லாஹ் அவனது பிரதிநிதியை ஏற்படுத்துவான். அன்னார் மீது நம்பிக்கை கொள்பவர்களுக்கு, சித்தீக்குகள், ஷஹீதுகள், ஸாலிஹீன்கள் என்ற பதவிகளுக்கும் உயர முடியும் என்பதை இவ்வசனம் நமக்கு எடுத்துரைக்கின்றது. அவ்வாறு அல்லாஹ்வையும் அவனது தூதர் (ஸல்) அவர்களையும் பின்பற்றியதன் பலனாக அல்லாஹ் முனீர் அஹ்மத் அஸீம் (அலை) அவர்களை இந்நூற்றாண்டில் தீனை கற்பிப்பதற்காக அவனது பிரதி

நிதியாக நியமித்துள்ளான். மேலும் அன்னாரின் வருகையின் முலம் அல்லாஹ் தற்போதும் அவன் அருள் புரிந்தவர்களின் பதவியை வழங்கிக் கொண்டிருக்கின்றான் என்ற திருக்குர்ஆனின் வாக்குறுதி நிறைவேறியுள்ளது. இத்திருவசனம் அன்னார் இந்நூற்றாண்டின் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீர்க்கதரிசி என்பதற்கு சாட்சி பகிர்கின்றது. அன்னாரின் வருகைக்கான ஆறாவது சான்று இவ்வசனத்தின் மூலம் நிரூபணமாகின்றது.

சான்று 7

அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது. (திருக்குர்ஆன் 69: 45-48)

மேலே உள்ள வசனங்களில், அல்லாஹ்விடத்திலிருந்து தனக்கு எந்தவொரு வஹீயும் வராமலிருக்கும்போது, தனக்கு இறைவனிடமிருந்து வஹீ வருகிறது என பொய்யுரைத்தால் அந்நபருக்கு இறைவன் வழங்கும் தண்டனையைப் பற்றி இவ்வசனம் எடுத்துரைக்கின்றது. ஆனால் மனிதர்களே கொஞ்சம் சிந்திந்து பாருங்கள், முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் கடந்த 2000ம் ஆண்டிலிருந்து தனக்கு இறைவனிடமிருந்து வஹீ வருவதாகவும் இந்த ஆண்டுவரை (2020வரை) அதுபோன்ற இறை வெளிப்பாடுகள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாகவும் பகிரங்கப்படுத்துகிறார்கள். அன்னார் அல்லாஹ்விடமிருந்து தனக்கு வஹீ வருவதாக கடந்து 20 ஆண்டுகளாக பொய்யுரைத்து நடிக்கின்றார்களா.? அப்படியென்றால் மேலே உள்ள வசனங்களின்படி அல்லாஹ் அன்னாரின் இந்த பொய்யான நாடகத்தை இத்தனை ஆண்டுகளாக கண்டு கொண்டிருக்கவில்லையா? அல்லது அல்லாஹ் இவ்விடயத்தில் ஒன்றும் அறியாதவனாக இருக்கின்றானா? (நவூதுபில்லாஹ்) இதுபோன்ற வசனங்கள் மூலம் நாம் பெறும் படிப்பினை என்ன என்பதை ஒரு கனம்

சிந்தித்துப் பாருங்கள்! மேலும் மேலே உள்ள இவ்வசனங்கள் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களின் உண்மைக்கு சிறந்த அசைக்க முடியாத சான்றுகளாக விளங்குகின்றது.

Compiled By: Mukarram R. Jamaludin Raother

Amir - Jamaat Ul Sahih Al Islam

South Zone - Kerala, India

E-mail : jamal.raother@gmail.com

Web : www.jamaat-ul-sahih-al-islam.com

Blog : www.sahih-al-islam.blogspot.in

Translated By : Abdul Sudheer & Nadheera Sudheer

**வெளியீடு : அமீர் ஜமாத்**

ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்

தமிழ்நாடு

# திருக்குர்ஆன் 69:45-48

எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக அவர் எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது.

